**தலைப்பு 242 – முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 242 – முகாமைத்துவு சேவைகள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 ஒக்தோபர் 06 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2 கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 48.40 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 46.45 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 1.95 மில்லியன் அதாவது 4.03 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | **தேறிய நிதியேற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்புக்கள்** | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 44.33 | 43.11 | 1.22 | 2.75 |
| மூலதனம் | 4.07 | 3.34 | 0.73 | 17.94 |
| **மொத்தம்** | **48.40** | **46.45** | **1.95** | **4.03** |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

திணைக்களத்திற்குரிய 24201 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| **செலவினம்** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளவாறானது** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளவாறானது** | **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளவாறானது** |
| **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| 4.00 | 2.44 | 2.00 | 2.39 | 18.00 | 10.11 |

## 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆறு செலவின விடயங்களுக்கு மிகை நிதி ஏற்பாடு செய்யப்பட்டமையால் அச்செலவின விடயங்களுக்குரிய நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டின் 27 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சளவினைக் கொண்டிருந்தது.

### 3.2 செயலாற்றல்

2015 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) நிதிப் பிரமாணம் 71 இன் பிரகாரம் பதவிகளின் பதவிப் பெயர்களை மாற்றுதல், புதிய பதவிகளை ஏற்படுத்துதல், பதவிகளை தரப்படுத்துதல், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையை அதிகரித்தல், புதிய அனுமான அல்லது சம்பள அளவுகளை ஏற்படுத்துதல் அல்லது தற்போது காணப்படும் அனுமானங்களை மீளமைத்தல் அல்லது தற்காலிக ஊழியர்களை நிரந்தர பதவியணிக்கு உள்ளீர்ப்புச் செய்தல் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் என்பன திணைக்களத்தின் செயற்பாடுகளாக இருந்தன. அதன் பிரகாரம் வருடக் கணக்காக திணைக்களத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்கும் போது சில தெரிவுசெய்யப்பட்ட செயற்பாடுகள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டு திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்ததால் திணைக்களத்தின் செயற்பாடுகளில் உள்ளடக்கப்பட்ட சில செயற்பாடுகளுக்காக திட்டங்களைத் தயாரித்தல், செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

(ஆ) கணக்காளர் சேவை யாப்பின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட மிகை தர பதவிகளின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டமையால் கணக்காய்வாளர் சேவையின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்காக ஓய்வுபெறுவதற்கு முன்னர் தகைமைகளைப் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், மிகைத்தர பதவி வரை உயர்வு பெறுவதற்காக சந்தர்ப்பம் கிடைத்திருக்கவில்லை. இதன் காரணமாக பதவி உயர்வு பெற்றுக்கொள்ளாத ஓய்வுபெறுவதற்கு நேர்ந்துள்ளதாகவும் இதனால் மிகைத்தர பதவிகளை ஏற்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்குமாறு கட்டளை இலக்கம் 10 இன் மூலம் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் அதற்காக 04 அமைச்சுக்களில் 04 பதவிகளை ஏற்படுத்துவதற்கு மாத்திரம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(இ) நிதிப் பிரமாணம் 71 மற்றும் 2014 மார்ச் 31 ஆந் திகதிய 2014/03 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக செய்யப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது இனங்காணப்பட்டதன் பிரகாரம் திணைக்களத்தினால் பதவிகளை ஏற்படுத்தல், திருத்தம் செய்தல் அல்லது இல்லாமலாக்குதல் போன்ற செயற்பாடுகளை நிறைவேற்றும் போது உரிய தரப்பினர்களுடன் கலந்துரையாடல்கள் / கூட்டங்கள் நடாத்தப்பட்டதை உறுதிப்படுத்துவதற்கு தேவையான கையொப்ப பதிவேடுகள் மற்றும் கலந்துரையாடல் குறிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) திணைக்களத்தினால் நிதிப் பிரமாணம் 71 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கும் போது அச்செயற்பாடுகளை இலகுவாக்குதல் மற்றும் வழிகாட்டலொன்றாக பயன்படுத்தப்படுகின்ற வழிகாட்டியொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வழிகாட்டியின் பிரகாரம் செயற்படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2013 ஆம் ஆண்டின் ஆரம்பிக்கப்பட்டிருந்த மாவட்ட / பிரதேச செயலகங்களில் உள்ள பதவியணியினர் மீளாய்வின் போது 15 மாவட்டங்களின் நடவடிக்கைகள் 2015 யூன் மாதம் அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எனினும் எஞ்சிய 09 மாவட்டங்களிலும் பதவியணி மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன. இதனால் 03 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2014 யூன் மாதத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடலொன்று மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்த 2015 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் உயர்கல்வி நிறுவனங்கள் தொடர்பாக மீளாய்வின் போது 31 நிறுவனங்களின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2016 ஆகஸ்ட் 25 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) பொலிஸ் திணைக்களத்திற்காக 21,232 மேலதிக பதவிகள் தேவையென இனங்காணப்பட்டிருந்த போதிலும், 2,559 பதவிகளுக்காக மாத்திரம் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட புதிய பதவியணி திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் புதிய பதவிகளை அங்கீகரித்து தருமாறு வேண்டுகோள்கள் அவ்வப்போது சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் மீதான நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 21 | 13 | 08 |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 02 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 45 | 35 | 10 |
| (iv) | ஆரம்ப நிலை | 14 | 14 | - |
| | மொத்தம் | 82 | 64 | 18 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

அரச மற்றும் மாகாண அரச சேவைகளில் பதவியணியினர் தொடர்பான தகவல் முறைமையை பேணுதல் இத்திணைக்களத்தின் செயற்பாடொன்றாக இருந்த போதிலும், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறைக்குரிய 04 பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டமை காரணமாக உள்ளவாறான பதவியணியினர் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட தரவுகள் முறைமையொன்றைப் பேணிச்செல்வதற்கு திணைக்களம் தவறியிருந்தது.